ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1998–2004 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. ஆர். கனகராஜ், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், அன்புடன் பழகும் பண்பும், திறம்படப் பணியாற்றும் பாங்கும் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களின் அன்பைப் பெற்றவரும், சாதாரண தொண்டராக இருந்து, படிப்படியாக பல்வேறு பொறுப்புகளை வகித்து, சட்டமன்ற உறுப்பினராகி, பொது வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. ஆர். கனகராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் 21–3–2019 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.